யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
## Term Examination, March - 2016

| இலங்கை வரலாறு | புள்ளித்திட்டம் | தரம் :- 13(2016) |
|---|---|---|

### பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | **5** | 11) | **2** | 21) | **3** | 31) | **3** |
| 02) | **3** | 12) | **3** | 22) | **5** | 32) | **4** |
| 03) | **4** | 13) | **1** | 23) | **1** | 33) | **5** |
| 04) | **5** | 14) | **2** | 24) | **4** | 34) | **2** |
| 05) | **4** | 15) | **3** | 25) | **4** | 35) | **2** |
| 06) | **5** | 16) | **2** | 26) | **5** | 36) | **5** |
| 07) | **5** | 17) | **3** | 27) | **2** | 37) | **4** |
| 08) | **2** | 18) | **4** | 28) | **4** | 38) | **5** |
| 09) | **3** | 19) | **1** | 29) | **3** | 39) | **4** |
| 10) | **4** | 20) | **2** | 30) | **1** | 40) | **2** |

The National e-learning Portal for The General Education

### பகுதி - II

01) படவேலை

02) (அ) 1. வளவகங்கை
2. மாணிக்ககங்கை
3. கிரிந்தி ஓயா
4. கும்புக்கன் ஓயா

(ஆ)

| | | |
|---|---|---|
| அனுராதகம | - | அனுரதன் |
| உபதிஸ்ஸகம | - | உபதிஸன் |
| உஜ்ஜைனிகம | - | உஜ்ஜைனி |
| விஜிதகம | - | விஜிதன் |
| உருவெலகம | - | உருவெல |

(இ) ஆற்றக்கரைகளை அண்டி குடியேற்றங்களை அமைத்தமைக்கு முக்கிய காரணம் அவர்களது சீவனோபாயத் தொழிலான விவசாயம்

சமவெளிப் பிரதேசம், நீர்வசதி, விவசாயத்திற்கு பொருத்தமான காலநிலை காணப்பட்டமை. (உலர்வலயப் பிரதேசம்)

வடமேற்கு கரையோரம் - விஜயன் குழுவினர். (கதம்பநதி, கம்பீரநதி, கோணநதி)

மதுராபுரி இளவரசியின் குடியேற்றம்

பண்டுவாசுதேவன் குழுவினர் குடியேற்றம்

பத்தக்கச்சானா குழுவினர் குடியேற்றம்

இலங்கையின் கிழக்கு, தென்கிழக்கு திசைகளில் குடியேற்றங்கள் அமைத்தமை. மேற்குப் பிரதேசத்தில் களனி கங்கைக் கரையில் கல்யாணிக் குடியிருப்பு அமைந்தமை

தென்கிழக்குப் பிரதேசத்தில் கிரிந்தி நதிக்கரை, கப்பறகந்த நதிக்கரையில் குடியிருப்பு அமைந்தமை. இவ்வாறு ஆரம்பகாலத்தில் ஆற்றங்கரை அண்டி குடியேற்றங்கள் ஏற்பட்டு சனத்தொகை அதிகரிக்க உள்நாடு நோக்கி பரவலடைந்தது.

03) தேவநம்பியதீசன்

- ✶ திசன் - மௌரிய மன்னன் அசோகன் தொடர்பு
- ✶ பௌத்தசமயம் வருகை வளர்ச்சி
- ✶ பௌத்தசாசனம் தோற்றம்
- ✶ வெள்ளரசு மரக்கிளை நாட்டல்
- ✶ மௌரியக் கலையை ஒத்தகலை மரபு, தூபி முறை

கட்டிடக்கலை, இலக்கியக்கலை வளர்ச்சி

கலாசார முக்கியத்துவம் இன்று வரை பெரும்பான்மை மக்கள் பௌத்தராக இருப்பதற்கு தேவநம்பியதீச மன்னனே வழி அமைத்தான்.

04)
- ✶ பிற்பட்ட பொலநறுவைக் காலத்தில் ஏற்பட்ட அரசியல் பிணக்குகள்
- ✶ உள்நாட்டுக் குழப்பங்கள்
- ✶ பராக்கிரமபாகு கடைப்பிடித்த வெளிநாட்டுக் கொள்கை
- ✶ மக்கள் பொருளாதார ரீதியாக பாதிப்புற்றமை
- ✶ பலவீனமான மன்னர்களின் ஆட்சி
- ✶ நோய் ஏற்பட்டமை
- ✶ கலிங்க பாண்டிய வம்சங்களுக்கிடையேயான போட்டி
- ✶ கலிங்கமாகனின் படையெடுப்புடன் முற்றாக தளர்வுற்று வீழ்ச்சி அடைந்தமை

போன்ற விடயங்களைக் குறிப்பிடல்

05) (அ) 'கலிகால சாகித்திய சர்வக்ஞ பண்டித'

(ஆ) கவிசிலுமின
விசுத்திமார்க்க சன்னய
சிதத் சங்கராவ
வினய வினிச்சய பீகாவ
யோகாரணவய

(இ)
- ✶ பெலிகலையில் இருந்த தந்நதாதுவை தம்பதெனியாவில் பிரதிஷ்டை செய்து உன்னதமான தலதா வழிபாட்டை மேற்கொண்டான்.
- ✶ பிக்குகளின் ஒழுக்க நெறிக் கோவையை எழுதுவித்தான்.
- ✶ உபசம்பதா சடங்கினை நடாத்தியமை
- ✶ வெளிநாடுகளிலிருந்து ஒழுக்க தர்மமுடைய பிக்குகளை அழைப்பித்தான்.
- ✶ கவிசிலுமின, விசுத்திமார்க்க சன்னய நூல்களை எழுதியமை

(ஈ)
- ✶ மாகனுடன் நடந்த யுத்தம்
- ✶ சந்திரபானுவின் முதலாவது படையெடுப்பு
- ✶ சந்திரபானுவின் இரண்டாவது படையெடுப்பு

மாகனுடைய ஆட்சியில் இருந்த இராசரட்டையை மீட்டெடுத்தல். இதற்காக தென்னிந்தியாவில் இருந்து பாண்டிய மன்னனுடைய உதவியைப் பெற்றான். சந்திரபானு மீண்டும் படையெடுத்தான். அவனது படையெடுப்பையும் பாண்டிய மன்னின் உதவி பெற்று சந்திரபானுவைக் கொன்றான். போன்ற விடயங்களைக் குறிப்பிடல்

06) ✶ ஜயமஹலேனவினதும் சுனேந்திர தேவியினதும் மகனாவார்.
- ✶ கோட்டையைத் தலைநகராக்கிக் கொண்டார்.
- ✶ இலங்கையை ஐக்கியப்படுத்தி ஆண்ட இறுதிச் சிங்கள மன்னராவார்.
- ✶ 18 வன்னிப் பிரதேசங்களையும் தமதாட்சிக்குட்படுத்தினார்.
- ✶ சப்புமல் குமாரன் மூலம் யாழ்ப்பாண இராச்சியத்தை வெற்றி கொண்டார்.
- ✶ மலையகத்தில் குழப்பம் விளைவித்த ஜோதியவை அடக்க அம்புலுகல குமாரனை அனுப்பினான்.
- ✶ தென்னிந்தியாவின் அதிவீரராம பட்டணத்திற்கு எதிராக படையெடுப்பு மேற்கொண்டான்.
- ✶ சிறந்த கல்விமானாகத் திகழ்ந்தான்
- ✶ பிரிவெனாக்கள் வளர்ச்சி அடைந்தன
- ✶ இலக்கிய நூல்கள் எழுந்தன.
- ✶ இந்து பிரமாணிய மதங்கள் வளர்ச்சி போன்றவற்றை விளக்கல்.

07) போர்த்துக்கேயர்

கண்டி அரசர்களுக்கும் போர்த்துக்கேயர்களுக்கும் இடையில் ஆரம்பகாலத் தொடர்புகள் சமாதானமான முறையில் அமைந்திருந்தாலும் பின்னர் இருசாராருக்குமிடையே போர்கள் எழுந்தன. மலைநாட்டு மன்னர்கள் போர்த்துக்கேயருடன் தொடர்பை ஏற்படுத்தல் (கத்தோலிக்க சமயத்தை தழுவல்)

- ✶ போர்த்துக்கேயர் 1590 யமசிங்க பண்டாரவை (தொன்பிலிப்) மலைநாட்டு மன்னராக்குதல்
- ✶ போர்த்துக்கேயரைத் துரத்திவிட்டு கோணப்புபண்டார, 1ம் விமலதர்மசூரிய என்னும் பெயருடன் மன்னராதல்
- ✶ பல தடவை போர்த்துக்கேயர் மலைநாட்டுடன் போர் தொடுத்தமை.
  - ➢ 1594 - தந்துரே போர்
  - ➢ 1602/3 - பலனப் பொர்
  - ➢ 1630 - ரந்தெனிவெல போர்
  - ➢ 1638 - கன்னொருவப் போர்

இவ் ஆக்கிரமிப்புக்கள் அனைத்திலும் போர்த்துக்கேயர், மலைநாட்டுப் படைகளிடம் தோல்வியையே பெற்றனர். போர்த்துக்கேயரை விரட்ட IIம் இராஜசிங்க மன்னன் ஒல்லாந்தரின் உதவியை நாடல்.

**ஒல்லாந்தர்**

மலைநாட்டு மன்னன், போர்த்துக்கேயரை துரத்துவதற்கு ஒல்லாந்தர் உதவியை நாடியமை. இதற்காக இலங்கையின் பொருளாதார வளங்களை ஒல்லாந்தர் தமதாக்கிக் கொள்ளல்.

- ✶ 1603 - ஒல்லாந்தர் மலைநாட்டு மன்னனைச் சந்தித்தல்
- ✶ 1638 ல் வெஸ்ரவோல்ட் ஒப்பந்தம்
- ✶ II ம் இராஜசிங்க மன்னன் ஒல்லாந்தரின் உதவியுடன் போர்த்துக்கேயரை துரத்தியடித்தல்
- ✶ ஒல்லாந்தரின் தந்திரத்தால் இருசாராருக்குமிடையில் மோதல் ஏற்படல்
- ✶ 1670 களில் ஒல்லாந்தரிடம் இருந்த பிரதேசங்கள் மலைநாட்டுடன் இணைக்கப்படல்

* ஒல்லாந்தர் மலைநாட்டு மன்னர்களுடன் சமாதானமாக பரிசுப் பொருட்களை அனுப்பி செயற்படல்
* 1760 - 1765 மலைநாட்டுடன் ஒல்லாந்தர் யுத்தம்
* 1766 - ஒப்பந்தம்

  இதன்பின் ஏற்பட்ட யுத்தம் என்பவற்றை குறிப்பிட்டு விளக்கல்

08)
* சுதேச நிர்வாகமுறை முடிந்தளவு பேணினர். இதன் மூலம் தமது எண்ணங்களை குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை எடுத்தல்
* உள்நாட்டு அரசனின் அதிகாரங்கள் போர்த்துக்கேய அரசனுக்காக கப்பித்தான் ஜெனரலால் செயற்படுத்தப்பட்டமை.
* மரபு ரீதியான ஆட்சிமுறை, ஆட்சி அலகுகள், அதிகாரங்கள் என்பன தொடர்ந்து செயற்படுத்தப்பட்டமை.
* கப்பித்தான் ஜெனரல், விரோத பசன்டா, ஒலிதோர் போன்றன போர்த்துக்கேய அதிகாரிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டமை போன்றவற்றை விளக்குதல்

09) கோல்புறூக் கமரன் சீர்திருத்தத்தின் விளைவுகள்

பிரித்தானியர் நிலம் தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகளும் கிராமிய மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளும்.

* புதிய வரிகள் அறவிடப்பட்டமையும் கிராம மக்களின் எதிர்ப்பும்
* கோப்பிப் பயிர்ச் செய்கையின் வீழ்ச்சியும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும்

  இதனால் மண்ணரிப்பு, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டன. 1840 ல் கொண்டு வரப்பட்ட தரிசு நிலச் சட்டம் காணிகள் அரசுடமையாக்கப்பட்டன.

  விவசாயிகளின் வாழ்வாதாரப் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டது.

  கம்சபாமுறை அதிகாரமிழந்தது

  இராஜகாரிய முறை நீக்கியதால் குளங்கள், கால்வாய்கள் புனரமைப்பு பணிகள் தடைப்பட்டமை போன்றவற்றைக் குறிப்பிடல்.